## நெல் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில்நுட்பங்கள்

First Published : 20 Jan 2011 12:00:00 AM IST



விருத்தாசலம்: நெல் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில்நுட்ப முறைகள் குறித்து வேளாண்மை துணை இயக்குநர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து வேளாண்மை துணை இயக்குநர் நா.தனவேல் தெரிவித்தது: கடலூர் மாவட்டத்தில் தற்பொழுது நெல் அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளதால், விவசாயிகள் கீழ்கண்ட, அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில்நுட்பங்களை கடைபிடித்து கூடுதல் வருவாய் பெறுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது.

நெல் ரகங்களின் வயதுக்கேற்றவாறு பயரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெல் கதிரின் மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தாலே அறுவடையை மேற்கொள்ளலாம். இதனால் மணிகள் உதிர்வதைத் தவிர்க்கலாம்.

அறுவடையின்போது 19 முதல் 23 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். முதிர்ந்த நெல் மணிகளின் அரிசி கடுமையானதாகவும், உறுதியாகவும் இருக்கும். அறுவடை செய்த நெல்லை நன்றாக தூய்மைபடுத்த வேண்டும்.

அதிக சூரிய வெப்பத்தில் நெல்லை காய வைக்கக்கூடாது. காயவைத்த நெல்லின் ஈரப்பதம் 12 சதவீதத்துக்குள் இருக்க வேண்டும். அதிக ஈரப்பதமுள்ள நெல் மணிகளைச் சேமித்து வைத்தால் பூஞ்சாண வித்துக்கள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படும். நெல்லை சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி தரையின் மீது மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும்.

நெல் மூட்டைகளை சுவரிலிருந்து ஒரு அடி இடைவெளிவிட்டு அடுக்கு வைத்தால் சுவற்றின் ஈரப்பதம் நெல் மணிகளைத் தாக்காது. சேமித்து வைத்துள்ள நெல்லில் அந்துப்பூச்சி

தாக்காமலிருக்க மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 10 மில்லி மருந்து என்ற அளவில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகளின் மீது தெளிக்க வேண்டும்.

பூச்சிகள், பூஞ்சாணங்கள் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுப் போன நெல்லை தனியாக பிரித்து விட வேண்டும். விளைபொருள்களுக்கு விவசாயிகள் எதிர்பார்க்கும் விலை கிடைக்காதபோது அவற்றினை இருப்பு வைக்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கிட்டங்கி வசதி உள்ளது. இருப்பு வைக்கும் பட்சத்தில் உடனடி பணத்தேவைக்கு பொருளீட்டு கடன் பெற வசதி உள்ளது. நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**மணிலாவில் ஒருங்கிணைந்த நோய் நிர்வாகம்**

ந. குப்பன்

First Published : 20 Jan 2011 12:00:00 AM IST

Last Updated : 20 Jan 2011 04:52:54 AM IST



மணிலா கொட்டைகள் - வேர் அழுகல் நோய் அறிகுறி

புதுச்சேரி: மணிலா ஒரு பணப்பயிர் மட்டுமின்றி முக்கியமான எண்ணெய் வித்துப்பயிர். மணிலாவின் விதையில் எண்ணெய் சத்து மட்டுமின்றி புரதச்சத்தும் அதிகமாக இருக்கிறது. மணிலா பயிரை பொதுவாக கார்த்திகை - மார்கழி பட்டங்களிலும் சித்திரை - வைகாசி பட்டங்களில் விவசாயிகள் பயிரிடுகின்றனர். கார்த்திகை - மார்கழி மாத மணிலா இறவை பட்டம். சித்திரை - வைகாசி மானாவாரி பட்டம். இது புன்செய் பயிர். மணிலா பயிரிட இப்போது ஏற்ற தருணம்.

டிஎம்வி 7, ஜெஎல் 24, கோ 2, விஆர்ஐ 1, விஆர்ஐ 2, விஆர்ஐ 3, விஆர்ஐ 4 ஆகிய மணிலா ரகங்கள்தான் அதிகம் பயிரிடப்படுகின்றன.

மணிலாவில் ஒருங்கிணைந்த நோய் நிர்வாகம் குறித்து புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார் கூறியது:

பொதுவாக கார்த்திகை தீபம் முடிந்தப் பிறகு மழை பெய்வது நின்றுவிடும். வயலில் தண்ணீர் தேங்கி நிற்காது. அந்தத் தருணத்தில் மணிலா விதைக்கப்படுகிறது. இப்படி விதைக்கப்படும் மணிலா 45 நாள்கள் கழித்து பூ பூக்கும் தருணத்துக்கு வருகிறது. அந்தப் பூ பூக்கும் தருணம் வரும்போது மார்கழி மாதத்தின் கடைசி வருவதால் பனி அதிகமாக நிலவும். அப்போது

நிலவக்கூடிய பனியின் அளவைப் பொறுத்தே பூக்களின் எண்ணிக்கை அதிகமாவதோடு, மகரந்தச் சேர்க்கையும் வேகமாக நடைபெறும். இதனால் மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இதைக் கருத்தில்கொண்டே விவசாயிகள் கார்த்திகை, மார்கழி பட்டங்களை அதிகம் விரும்புகின்றனர். இந்த மணிலா பயிர் மாசி மாதத்தில் அறுவடைக்கு வருவதால் நல்ல விலையும் போகிறது. மணிலா பயிர் மல்லாட்டை, வேர்க்கடலை, நிலக்கடலை என்றும் வழக்கத்தில் இருக்கிறது. விவசாயிகள் மணிலா விதையை விதைக்கும் முன்பு கண்டிப்பாக விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதனால் முளைப்புத் திறனும் கூடும். இளைப்புள்ளி நோய் வராலும் தடுக்க முடியும்.

விதை நேர்த்தி செய்யப்பட்ட மணிலா விதையை இதற்கென தயாரிக்கப்பட்ட பாத்திகளில் அதை விதைக்கலாம். விதைத்தவுடன் 20 நாள் கழித்து செடிகள் நன்கு முளைத்து வரும். அந்தத் தருணத்தில் ஒரு கிலோ டிரைகோடெர்மா விரிடி என்ற மருந்தை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒரு கையளவு ஒவ்வொரு செடியின் வேர் பகுதியில் படுமாறு பாத்திகளில் தூவிவிட வேண்டும். பின்னர் நீர் பாய்ச்ச வேண்டும். இப்படி செய்தால் இந்த டிரைகோடெர்மா விரிடி என்ற மருந்து அதிகமான எண்ணிக்கையில் வேர்ப் பகுதிகளில் பூஞ்ஞான வித்துகளைப் பெருக்கி வேர் அழுகல் நோயை உருவாக்கக்கூடிய தீமை தரும் பூஞ்ஞான கிருமிகளை எதிர்த்துப் போராடும்.

நோய் தாக்காமல் செடிகளைப் பாதுகாக்கலாம். இந்த மருந்து கழுத்து அழுகல் நோய் வராமலும் தடுக்கும். இந்த மருந்து கிடைக்காத பகுதிகளில் அல்லது நேரங்களில் சூடோமோனாஸ் என்ற உயிர்ரக பாக்டீரியா மருந்தை 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம்.

மணிலா விதை செடியாக வந்து ஒரு மாதம் கழித்து சில பகுதிகளில் ஆங்காங்கே மணிலா செடிகள் காய்ந்து போய் அதைப் பிடித்து இழுத்தால் வேரோடு ஒடிந்து வெளியே வந்துவிடும். இது வேர் அழுகல் நோய்க்கான அறிகுறி.

இதைக் கட்டுப்படுத்த ஓர் ஏக்கருக்கு 1 கிலோ டிரைகோடெர்மா விரிடி என்ற பூஞ்ஞான கொல்லியை வேரில் போட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தாக்குதல் அதிகமாக இருந்தால் இந்த மருந்தை

1 ஏக்கருக்கு 1 கிலோ எடுத்து தண்ணீரில் கரைத்து மாலை நேரத்தில் வேர் முழுவதும் நனையும்படி கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 113.31 அடி**

First Published : 19 Jan 2011 12:59:22 PM IST

தஞ்சாவூர், ஜன. 18: மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 113.31 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 1,295 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 10,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கல்லணையில் இருந்து வினாடிக்கு காவிரியில் 5,003 கன அடி, வெண்ணாற்றில் 102 கன அடி, கல்லணைக் கால்வாயில் 2,017 கன அடி, கொள்ளிடத்தில் 304 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

**கால்நடை ஆராய்ச்சி மையத்தில் சிறப்பு பயிற்சி வகுப்புகள் தொடக்கம்**

First Published : 19 Jan 2011 09:54:14 AM IST

ஈரோடு, ஜன. 18: ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

÷பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஒருவார காலம் கால்நடை மற்றும் மீன்வள வார விழாவாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு இம்மையத்தில் செவ்வாய்க்கிழமை கறவைமாடு வளர்ப்புப் பற்றி சிறப்புப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.÷19-ம் தேதி ஜப்பானிய காடை முட்டை ஊறுகாய் தயாரித்தல் குறித்தும், 20-ம் தேதி புறா, அலங்காரப் பறவைகள் பராமரிப்புக் குறித்தும் சிறப்புப் பயிற்சி வகுப்பு நடைபெறும். மாட்டினம், எருமை இனங்கள், வெள்ளாடு இனங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 19 Jan 2011 09:52:43 AM IST

ஈரோடு, ஜன. 18: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 83.36 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 648 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி, வாய்க்காலில் விநாடிக்கு 2,300 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 17.50 டிஎம்சி.

**கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி பிப்.4 முதல் பால் நிறுத்தப் போராட்டம்**

First Published : 19 Jan 2011 01:01:06 PM IST

சேலம், ஜன.18: தமிழகத்தில், கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி பிப்ரவரி 4-ம் தேதி முதல் பால் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்கம் அறிவித்துள்ளது.

÷சேலத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டத்துக்குப் பிறகு சங்கத் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேலு செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.5, எருமைப்பாலுக்கு ரூ.8-ம் உயர்த்த வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம்.

÷இந் நிலையில் பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொண்டபடி உயர்த்தாமல், பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.1.10, எருமைப்பாலுக்கு ரூ.2.20 மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது.

÷இதே போல் கிராம கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வாக ரூ.125-ல் இருந்து ரூ.500 வரை மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 60 சதவீத பணியாளர்கள் நாளொன்றுக்கு ரூ.4-ம், மீதமுள்ளவர்கள் நாளொன்றுக்கு ரூ.15 மட்டுமே ஊதிய உயர்வு பெறுகின்றனர்.

÷பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், கிராம கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, பணி வரன்முறை உள்ளிட்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி வரும் பிப்ரவரி 4-ம் தேதி முதல் காலவரையற்ற பால் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம்.

÷கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜனவரி 25-ம் தேதி பால் உற்பத்தியாளர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது. இதே போல் தருமபுரியில் 26-ம் தேதியும், வேலூரில் 27-ம் தேதியும், திருச்சியில் 29-ம் தேதியும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

÷விழுப்புரத்தில் 30-ம் தேதியும், ஈரோட்டில் 31-ம் தேதியும், திருப்பூர், கோவையில் பிப்ரவரி 1-ம் தேதியும் போராட்ட வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கப்படும் என்றார்.

÷பால் நிறுத்தப் போராட்டம் தொடங்கினால் தனியார் நிறுவனங்கள் பால் கொள்முதல் செய்யப்படுவதும் பாதிக்கப்படும். இதனால் சென்னை உள்ளிட்ட பெருநகரங்கள், மாவட்டத் தலைநகரங்களில் வசிக்கும் மக்களுக்கு பால் தட்டுப்பாடு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்**

First Published : 19 Jan 2011 11:44:07 AM IST

சிவகாசி, ஜன. 18: சிவகாசி அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி நுண்ணுயிரியல், மரபியல் ஆகிய துறைகள் இணைந்து ராஜபாளையம் அருகே சோழாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு நுண்ணுயிர் மற்றும் உயிரி உரம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தின.

உதவிப் பேராசிரியர்கள் வே.திருமலை, கா.நளினி ஆகியோர் உயிரி உரம் தயாரிக்கும் செயல்முறை விளக்கத்தையும், அதன் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளிடையே விளக்கினர். இயற்கை உரம் மூலம் தயாரிக்கும் உணவுப் பொருள்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது எனவும் விவசாயிகளிடம் கூறினர்.

**மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள் அளிப்பு**

First Published : 19 Jan 2011 01:08:20 PM IST

சீர்காழி, ஜன. 18: சீர்காழி வட்டம், நாங்கூரில் வேளாண் துறை சார்பில் மானிய விலையில் வேளாண் இடு பொருள்கள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவிற்கு நாங்கூர் ஊராட்சித் துணைத் தலைவர் ரவி தலைமை வகித்தார். சீர்காழி வேளாண் உதவி இயக்குநர் ராமகிருஷ்ணன், சீர்காழி துணை வேளாண் அலுவலர் பொம்முராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் முருகானந்தம், துணை இயக்குநர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கி, வேளாண் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், மானிய விலையில் வழங்கப்படும் இடுபொருள்களின் விவரங்கள் குறித்தும் எடுத்துக் கூறினர்.

விழாவில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் விவசாயிகளுக்கு ரூ. 10 லட்சம் மதிப்புள்ள கைத்தெளிப்பான்கள், தார்ப்பாய், ஆயில் என்ஜீன், பவர் டில்லர் ஆகியவை வழங்கப்பட்டன.

விழாவில் விவசாய சங்கத் தலைவர் சிவபிரகாசம், உதவி விதை அலுவலர் பிரபாகரன், உதவி வேளாண் அலுவலர்கள் சிவபெருமாள், ராமகிருஷ்ணன்,விஜய், அமிர்தராஜ், தமிழரசன், வேதையராஜன், முன்னோடி விவசாயிகள், கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

**ஜன. 21-ல் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

First Published : 19 Jan 2011 12:48:47 PM IST

புதுக்கோட்டை, ஜன. 18: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் ஜன. 21 ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜன. 21) காலை 10.30 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி தலைமையில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் பல துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர்.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை மட்டும் அதில் தெரிவித்து பயன்பெறலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினமலர்

**நடமாடும் நோய் பரிசோதனைக் கூட வேன்: கால்நடை வளர்ப்போர் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,02:12 IST

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்டங்களில் கிராமங்களுக்கு சென்று கால்நடைகளுக்கு நோய் உள்ளதா என்பதைக் கண்டறிய, கால்நடைத்துறைக்கு நோய் பரிசோதனைக் கூடத்துடன் கூடிய வேன் வழங்கப்பட்டுள்ளது.

கிராமங்களில் கால்நடைகளுக்கு நோய் உள்ளதா என்பதைக் கண்டறிந்து, கால்நடை உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 16 மாவட்டங்களுக்கு, தலா 11 லட்சம் ரூபாய் மதிப்பில், நோய் பரிசோதனைக் கூடத்துடன் கூடிய வேன் வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட நடமாடும் பரிசோதனைக் கூட வேனை, கடந்த 6ம் தேதி, கலெக்டர் ஆஷிஷ்சட்டர்ஜி கால்நடைத்துறைக்கு வழங்கினார்.

இந்த வேன் காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு செல்லும். வேனில் இரண்டு கால்நடை மருத்துவர்கள், இரண்டு கால்நடை உதவியாளர்கள், இரண்டு பராமரிப்பு உதவியாளர்கள் இருப்பர். அவர்கள் கால்நடை சாணம், பால், சிறுநீர், ரத்தம்,

தோல் ஆகியவற்றை பரிசோதித்து சம்மந்தப்பட்ட கால்நடை எந்த நோய் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்ற விவரத்தை உடனடியாக தெரிவித்து விடுவர். அதன்பின், அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு கால்நடையை அழைத்து சென்று சிகிச்சை அளிக்கலாம்.

இது குறித்து, காஞ்சிபுரம் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் பதான்நஸருல்லாகான், உதவி இயக்குனர் ராசன் சி.ஆண்டனி ஆகியோர் கூறியதாவது: நடமாடும் பரிசோதனைக் கூட வேன், வாரத்தில் மூன்று நாட்களுக்கு கிராமங்களுக்கு செல்லும். முதல் கட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளோம். ஏதேனும், கிராமங்களில் கால்நடைகள் நோயினால் இறந்ததாக தகவல் கிடைத்தவுடன் உடனடியாக சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு செல்கிறோம். முன்பு கால்நடைகளை எந்த நோய் தாக்கியுள்ளது என்பதை அறிய விவசாயிகள் மாதிரி கொடுத்துவிட்டு ஒரு நாள் காத்திருக்க வேண்டும். நடமாடும் நோய் பரிசோதனைக் கூடத்தில் உடனடியாக முடிவை அறிந்து கொள்ளலாம். நோய் அறிகுறியை அறிவதற்கு தேவையான பரிசோதனைக் கருவிகள் வேனில் இடம் பெற்றுள்ளன. இது கால்நடை வளர்ப்போருக்கு வரப்பிரசாதம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**முகாம் நடைபெற உள்ள இடங்கள் :** நடமாடும் பரிசோதனைக் கூட வேன், இம்மாதத்தில் நான்கு கிராமங்களுக்கு சென்று வந்துள்ளது. வரும் 25ம் தேதி, வாலாஜாபாத் ஒன்றியத்திற்குட்பட்ட புளியம்பாக்கம் கிராமம், 27ம் தேதி காஞ்சிபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட முசரவாக்கம் கிராமம், 31ம் தேதி கூத்திரம்பாக்கம் கிராமத்திற்கும் நடமாடும் நோய் பரிசோதனைக் கூட வேன் செல்ல உள்ளது. சம்மந்தப்பட்ட கிராமங்களில், காலை 8 மணியிலிருந்து பகல் ஒரு மணி வரை வேன் நிற்கும். பொதுமக்கள் தங்கள் கால்நடைகளை சிகிச்சைக்கு அழைத்து செல்லலாம்.

**கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்த கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,02:03 IST

ஸ்ரீபெரும்புதூர் : புதுப்பேர் கிராமத்தில், ஒரு நாள் மட்டும் செயல்படும் கால்நடை மருத்துவமனையை, தினமும் செயல்படும் வகையில், தரம் உயர்த்த வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்திற்கு உட்பட்டது புதுப்பேர் கிராமம். ஸ்ரீபெரும்புதூர் - குன்றத்தூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இக்கிராமத்தில், 250 குடும்பங்களில், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். இவர்களுக்கு கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில்.

இங்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. இப்பகுதி மக்கள், கால்நடை மருத்துவமனை வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அதை தொடர்ந்து, சில ஆண்டுகளுக்கு முன் கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்டப்பட்டு திறக்கப்பட்டது. இக்கட்டடத்தில், புதன்கிழமை மட்டும் கால்நடை மருத்துவமனை செயல்படுகிறது. அன்று மட்டும் கால்நடை மருத்துவர் வருகிறார்.

கால்நடைகளை பரிசோதித்து மருந்துகள் வழங்குகிறார். கருத்தரிப்பு, நோய் தடுப்பு ஊசி போடுதல் போன்ற பணிகளுக்கு கால்நடைகளை சோமங்கலம் கிராமத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போர் கடும் அவதிப்படுகின்றனர். இப்பிரச்சனைக்கு தீர்வு காண, புதுப்பேர் கிராமத்தில் உள்ள பார்வை கால்நடை மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக மாற்ற வேண்டும். தடுப்பு ஊசி, கருத்தரிப்பு ஊசி போட்டால் புதுப்பேர், காட்டரம்பாக்கம், பெரியார் நகர், நந்தம்பாக்கம், நல்லூர் கிராம மக்களும் பயன் பெறுவர்.

**மரவள்ளி விலை நிர்ணயிக்க ஜன., 21ல் முத்தரப்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,02:34 IST

சேலம்: சேலம் மாவட்ட கலெக்டர் சந்திரகுமார் வெளியிட்ட அறிக்கை: சேலம் மாவட்டத்தில் மரவள்ளி கிழங்கு விற்பனையில் விவசாயிகள் மற்றும் ஆலை உரிமையாளர்கள் சந்திக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண, வரும் 21ம் தேதி மாலை 3.30 மணிக்கு சேலம் புதிய கலெக்டர் அலுவலகத்தில் முத்தரப்பு கூட்டம் நடத்தப்பட உள்ளது. சேகோ சர்வ், தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய இன்ஜினியர்கள், வேளாண்மை, தோட்டக்கலை, கூட்டுறவு, வருவாய் அலுவலர்கள், வேளாண் பல்கலை பேராசிரியர்கள் கலந்து கொள்கின்றனர். கூட்டத்தில் மரவள்ளி கிழங்கு ஆலை சங்க நிர்வாகிகள், சாகுபடி செய்யும் விவசாய பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும். * விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 21ம் தேதி காலை 10.30 மணிக்கு, சேலம் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடக்கிறது. விவசாயிகள் பங்கேற்று வேளாண் தொடர்பான குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஏரி நிலங்களை ஆக்கிரமித்து பயிர் சாகுபடி மீட்டு பாதுகாக்க பொதுமக்கள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,02:31 IST

நங்கவள்ளி: ஏரியின் பல ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அதில், ஆக்கிரமிப்பாளர்கள், நெல், சோளம் சாகுபடி செய்திருப்பது கிராம மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஏரி நிலங்களை மீட்டு பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தாரமங்கலம் ஒன்றியத்தில் உள்ள துட்டம்பட்டி கிராமம். கிராமத்தின் அருகில் 63 ஏக்கர் சுற்றளவு கொண்ட துட்டம்பட்டி ஏரி உள்ளது. இந்த ஏரியில் மழைக்காலத்தில் தண்ணீர் நிரம்பி வழியும். ஏரிநீரை பயன்படுத்தி விவசாயிகள் நெல், கடலை, கரும்பு, வாழை போன்ற பயிர்களை சாகுபடி செய்வார்கள். துட்டம்பட்டி கிராமத்துக்கு சாலை வசதி இல்லை. சில ஆண்டுக்கு முன்பு தாரமங்கலம்-சின்னப்பம்பட்டி ரோட்டில் இருந்து துட்டம்பட்டி கிராமத்திற்கு ஏரியின் நீர்பரப்பு பகுதி வழியாக சாலை அமைக்கப்பட்டது. அதனால், 63 ஏக்கரில் பரந்து விரிந்து கிடந்த ஏரி ரோடு போட்டதால் இரண்டாக பிரிந்தது. துட்டம்பட்டி ரோட்டின் ஒரு பகுதியில் உள்ள ஏரிக்கு மட்டுமே தற்போது நீர்வரத்து கிடைக்கிறது. கடந்த சில நாட்களாக பெய்த மழையால் ஏரியின் ஒருபகுதியில் தற்போது நிரம்பி வழிகிறது. அதேநேரம் ஏரியின் மற்றொரு பகுதி வறண்டு விட்டது. அந்த ஏரிக்கான நீர்வரத்து பகுதியையும் அடைத்து விட்ட ஆக்கிரமிப்பாளர்கள் ரோட்டின் ஒரு பகுதியில் உள்ள ஏரி நிலத்தில் நெல், சோளம் சாகுபடி செய்துள்ளனர். ஏரியில் 10 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து ஒரு கும்பல் நெல் சாகுபடி செய்துள்ளது பொதுமக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஏரி நிரம்பி வழிவதால் தற்போது சுற்றுப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. ஆனால், ஆக்கிரமிப்பாளர் நிலத்தை படிப்படியாக ஆக்கிரமித்து வருவதால் விரைவில் ஏரி மாயமாகும் அபாயம் உள்ளது.எனவே, ஆக்கிரமிப்பாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஏரி நிலங்களை மீட்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என, துட்டம்பட்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,02:24 IST

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று வெண் பன்றி வளர்ப்பு பயிற்சி முகாம் நடக்க உள்ளது. நாமக்கல் மோகனூர் சாலையில், வேளாண் அறிவியல் நிலையம் அமைந்துள்ளது. அங்கு, விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பயிற்சிகள்

அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் வெண்பன்றி வளர்ப்பின் நன்மைகள், பன்றி இனங்களை தேர்வு செய்யும் முறை, பண்ணை அமைவிடம், பண்ணை வீடு, இனப்பெருக்கம், சினைப் பன்றி பராமரிப்பு, பன்றிக்குட்டி பராமரிப்பு, தீவன மேலாண்மை, நோய் பிரச்னை மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அந்தப் பயிற்சியில் பண்ணையாளர்கள், ஊரக மகளிர், விவசாயிகள் என பலரும் பங்கேற்கலாம்.

**நெல், சிறுதானியம்குறித்த பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,01:39 IST

கந்தர்வக்கோட்டை: கந்தர்வக்கோட்டை வேளாண்மை கோட்டத்தில் விதை கிராமத்திட்டத்தின் கீழ் நெல், சிறுதானியங்கள், பயறு வகை தானியங்கள், எண்ணெய் வித்துப்பயிர்கள் குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி, வெள்ளாளவிடுதி, தச்சன்குறிச்சி, மஞ்சப்பேட்டை, பல்லவராயன்பட்டி ஆகிய பஞ்சாயத்துக்களில் நான்கு நாட்கள் நடந்தது.நெல், சிறுதானியங்கள், எண்ணெய் வித்து பயிர்களுக்குரிய பயிற்சியில் அந்தந்த பஞ்சாயத்து தலைவர்கள் பங்கேற்று பயிற்சியை துவக்கி வைத்தனர். அந்தந்த பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த விவசாயிகள், பண்ணை மகளிர்கள் பங்கேற்றனர். கந்தர்வக்கோட்டை வேளாண் உதவி இயக்குனர் வைத்தியநாதன், விதை கிராம திட்டம் குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்து, பயிற்சி கையேடுகளை வழங்கினார்.

விதைச்சான்று அலுவலர் ஜெயபாலன் தரமான விதை உற்பத்தி குறித்த கருத்தையும், ராஜராஜன் 1000 சாகுபடி முறை குறித்து வேளாண் அலுவலர் சங்கரலட்சுமியும், விதைப்பண்ணை அமைப்பது குறித்து தொழில் நுட்பக்கருத்துக்களை வேளாண் அலுவலர் தங்கப்பாண்டியன், உதவி விதை அலுவலர் பாண்டியன் ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கினர்.

**நெல் விற்பனை ரசீதுகளை பத்திரப்படுத்த வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,01:43 IST

திருத்துறைப்பூண்டி: ""நெல்லுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை குவிண்டால் ஒன்றுக்கு 2,000 ரூபாய் மத்திய அரசிடம் இருந்தும், போனஸாக குவிண்டால் ஒன்றுக்கு 400 ரூபாய் மாநில அரசிடம் இருந்தும் கோரப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் விற்பனை செய்து ரசீதுகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்,'' என "நமது நெல்லைக்காப்போம் - கிரியேட்' மாநில ஒருங்கிணைப்பாளர் கட்டிமேடு ஜெயராமன் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறியதாவது:நெல் குவிண்டால் ஒன்றுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை 2,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய டெல்டா விவசாயிகள், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமையில், விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் வலிவலம்

சேரன், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க பொதுச் செயலாளர் கீழ்வேளூர் தனபாலன் முன்னிலையில் கடந்த டிசம்பர் பத்தாம் தேதி டெல்லி பார்லிமென்ட் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து குவிண்டால் ஒன்றுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையாக 2,000 ரூபாய் நிர்ணயம் செய்ய போராட்டக்குழுவில், காங்கிரஸ் தலைவர் சோ னியாவை நேரில் சந்தித்து மனு க்கொடுத்தபோது, நெல் விலை உயர்வு குறித்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.தமிழக அரசிடம் நெல் குவி ண்டால் ஒன்றுக்கு போனசாக 400 ரூபாய் கேட்டு தமிழக முதல்வருக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் விலை உயர்வும், மாநில அரசின் போனசும் எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்து ரசீதுகளை பெற்று, பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.நேரடி நெல் கொள்முதல் நி ø லயங்களில் நெல் விற்பனை செ ய்யும்போது ஏற்படும் புகார் குறி த்து நடவடிக்கை எடுக்க மா வட் ட நிர்வாகம், தமிழ்நாடு நுகர்பெ õருள் வாணிபக்கழகம் உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.விவசாயிகள் தங்கள் புகார்க ளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், கொள்முதல் நிலைய புகார் புத்தகத்தில் பதிவு செய்ய தயங்க வேண்டாம்.

**புதிய மஞ்சள் வரத்தால் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,01:45 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் புது மஞ்சள் வரத்து அதிகரித்ததால், தொடர்ந்து ஒரு வாரமாக வீழ்ச்சியடைந்து வருகிறது. ஈரோடு சந்தையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை மஞ்சள் விலை குவிண்டால் 4,000 ரூபாய் வரையே இருந்தது. 2009 ஜூனில் 8,000 ரூபாயாக உயர்ந்தது. இதையடுத்து ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பளவு அதிகரித்தது. மஞ்சள் உற்பத்தி அதிகரித்த போதும், 2010 ஜூனில் 13 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்தது. டிசம்பர் 31ம் தேதி, ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 16 ஆயிரத்து 910 ரூபாய்க்கு விற்றது. ஜனவரி துவக்கத்திலிருந்தே புதிய மஞ்சள் வரத்து துவங்கியதால், விலை படிப்படியாக குறைய துவங்கியது. 13ம் தேதி ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 14 ஆயிரத்து 274 ரூபாய், வெளி மார்க்கெட்டில் 15 ஆயிரத்து ஒன்பது ரூபாயாக இருந்தது. பொங்கல் விடுமுறைக்கு பின் நேற்று முன்தினம் மஞ்சள் மார்க்கெட் நடந்தது. விரலி 14 ஆயிரத்து 10 ரூபாய் வரையும், கிழங்கு 14 ஆயிரத்து 161 ரூபாய் வரையும் விற்பனையானது. குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் விலை குறைந்தது. நேற்று ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 337 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. இதில், 205 மூட்டை விற்பனையானது. விரலி 14 ஆயிரத்து 939 ரூபாய்,

கிழங்கு 14 ஆயிரத்து 514 ரூபாய் வரை விற்றது. வெளி மார்க்கெட்டில் 653 மூட்டை விற்பனைக்கு வந்ததில் 217 மூட்டை விற்பனையானது. விரலி 14 ஆயிரத்து 534 ரூபாய், கிழங்கு 13 ஆயிரத்து 985 ரூபாய் வரை விற்பனையானது. மஞ்சள் வியாபாரி ஒருவர் கூறியதாவது: வடமாநிலங்களின் மஞ்சள் தேவைக்கு ஏற்ப விலை உயர்ந்து வருகிறது. சென்ற மாதம் வரை பழைய மஞ்சள் அதிகளவு வடமாநிலங்களுக்கு சென்றது. இம்மாதம் துவக்கம் முதலே புது மஞ்சள் வரத் துவங்கியதுடன், வட மாநிலங்களின் தேவை குறைந்துள்ளதால், விலையும் குறைந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**செண்பகப்புதூரில் நெல் கொள்முதல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,01:45 IST

சத்தியமங்கலம்: செண்பகப்புதூர் நெல் கொள்முதல் நிலையத்தில் இரண்டு நாளில் 44 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சத்தி அருகே செண்பகப்புதூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கொள்முதல் நிலையத்துக்கு விற்பனை செய்ய வரும் விவசாயிகள் தங்கள் நெல்லை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்படுவதாக கலெக்டரிடம் தெரிவித்தனர். கொள்முதல் நிலையத்தை கலெக்டர் சவுண்டையா ஆய்வு செய்தார். விவசாயிகள் கொண்டு வரும் நெல் சரியான எடையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா என, நெல் மூட்டைகளை தனித்தனியாக எடை போட்டு பார்த்தார். நெல்லின் ஈரப்பதம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பணம் ஆகியவற்றை சரிபார்த்தார். கொள்முதல் நிலைய அலுவலர் தண்டபாணி கூறுகையில், ""ஜனவரி 13, 14 ஆகிய இரண்டு நாட்களில் 44.50 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 17 சதம் ஈரப்பதம் உள்ள நெல் ஒரு கிலோ 11 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது,'' என்றார்.

**பூச்சி கொல்லிகளால் நன்மை பூச்சிகள் அழியும்:துணை இயக்குனர் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,02:19 IST

நாமக்கல்: "நெற்பயிரை அதிகளவில் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லி மருந்துகளை அதிகளவில் பயன்படுத்துவதால், நன்மை செய்யும் பூச்சிகளும் அழிந்து விடுகிறது' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நெல் சாகுபடியில் சில வகைப் பூச்சிகள் நெற்பயிரை அதிகளவில் சேதப்படுத்துகிறது. அதை கட்டுப்படுத்த விவசாயிகள் பூச்சிக் கொல்லி மருந்துகளை அதிகளவில் கையாளுகின்றனர். அதனால் நன்மை செய்யக்கூடிய பூச்சிகளும் அழிந்துவிடுகிறது. அதற்காக சுற்றுச்சூழல் மாசுபடாமல் இயற்கையோடு இணைந்த பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும். ஐப்பசி

மாதத்தில் நெற்பயிரை இலை மடக்குப்புழு, பச்சைத் தத்துப்பூச்சி, புகையான், குருத்துப்புழு ஆகிய பூச்சிகள் அதிகம் தாக்கும். இலைமடக்குப்புழு, இலையின் பச்சையத்தை சுரண்டித் திண்ணும். இலைகள் நீள வாக்கில் சுருட்டப்பட்டிருக்கும். இலைகளின் நுனியும் அடியும் சேர்ந்து மெல்லிய இழைகளால் பின்னியிருக்கும். இலைகள் வெளுத்து பின் காய்ந்துவிடும். கதிர்வரும் சமயத்திலும் பின் வளர்ச்சி பருவத்திலும் தாக்குதல் அதிகமாக இருக்கும். தவிர, நெல் மணிகள் முற்றிலும் பாதிக்கும். அதன் பொருளாதார சேதநிலை பத்து சதவீதம் இருக்கும். இலை சேதம் பூக்கும் பருவம் ஐந்து சதவீதமாகும். பச்சை தத்துப்பூச்சி தோகையை தட்டினால் இப்பூச்சிகள் தாவும். இரவில் விளக்கு ஒளியில் கவரப்படும் துங்ரோ, மஞ்சள் குட்டை போன்ற நோய்களை இப்பூச்சிகள் பரப்பும். அதனால் பயிர் வெளிரி வளர்ச்சி குன்றும். இலை சாற்றை நடவு வயலில் தூர்கட்டும் பருவத்தில் தூருக்கு ஐந்து பூச்சிகள் பூக்கும் பருவத்தில் ஐந்து பூச்சிகள் துங்ரோ நோய் பகுதியில் தூருக்கு இரண்டு பூச்சிகளாக இருக்கும். புகையான் பூச்சிகள் பயிரின் அடித்தண்டு பகுதியில் இருந்து சாற்றை உறிஞ்சும். அதனால் பயிர் மஞ்சள் நிறமாக மாறி பிறகு காய்ந்து விடும். பயிர்கள் புகைந்தது போல் வட்டவட்டமாக காணப்பட்டால் பிடிக்கும் பயிர் காய்ந்துவிடும். கதிர்கள் பதராகிவிடும். பூச்சிகள் நீரில் மிதந்து அடுத்த வயலுக்கு செல்லும். இதைக் கட்டுப்படுத்த வயலில் அதிக நீர் தேங்குதல், தழைச்சத்து, நெருக்கி நடுதல், பூச்சி மருந்தடித்து இயற்கை எதிரிப்பூச்சிகள் அழித்தல் போன்றவை கையாளக்கூடாது. பொருளாதார சேத நிலை தூக்கு ஒரு பூச்சியாகும். குருத்துப்பூச்சியின் புழு நடுக்குருத்து சாய்ந்திருக்கும் கையோடு குருத்து வந்துவிடும். தண்டில் சிறு துவாரமும் இருக்கும். தண்டினுள் புழுவையும், கழிவுகளையும் கூட்டையும் காணலாம். கதிர் வெண் கதிராக இருக்கும். அக்டோபர் முதல் டிசம்பர் வரை அதிகளவில் தாக்குதல் இருக்கும் பொருளாதார சேத நிலை நடவு வயலில் பத்து நடுக்குருத்து காய்ந்திருக்கும். இரண்டு வெண் கதிர் தோன்றும் இரவு நேரத்தில் விளக்குப் பொறிகள் வைத்து இந்த நான்கு பூச்சிகளையும் கவர்ந்து அழித்தல் வேண்டும். பூச்சிகள் பொருளாதார சேத நிலையை தாண்டினால் மட்டுமே அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மைய களப்பணியாளர்களது ஆலோசனை பெற்று நெற்பயிருக்கு பூச்சி மருந்து தெளிக்க வேண்டும். அதனால் சுற்றுச்சூழல் மாசுபடாமல் நன்மை செய்யக்கூடிய பூச்சிகளுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும். மேலும், பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளலாம்.

தவிர, புல் பூண்டு அகற்றுதல் வரப்புகளில் களை நீக்குதல் மண் பரிசோதனைப்படி தழைச்சத்து பரித்திடல், பட்டம் விட்டு நடுதல், நன்மை செய்யும் பூச்சிகளை ஊக்குவித்தல், விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறி அமைத்து பூச்சிகளை கண்காணித்தல், பைரித்திராய்டு மருந்துகளை தவிர்க்க வேண்டும். ஒரே சமயம் விதைப்பு, விதையுடன் பரவும் நோய்களை கட்டுப்படுத்த சூடோமோனா அ டிரைக்கோடர்மா, விதை நேர்த்தி செய்தல், பூச்சிகளை பிடித்து அழித்தல் வேண்டும். மேலும், வேப்பங்கொட்டை, வேப்ப எண்ணெயிலிருந்து தயாரித்த பூச்சி மருந்துகளையும் பயன்படுத்தலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவு பூச்சி கட்டுப்படுத்த வழிமுறை: வேளாண் துறை அறிவுரை

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,02:05 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட வேளாண்மை துறையில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயிர்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் இடுபொருள்கள் குறித்து வட்டார வேளாண்மை மையத்தில் ஆலோசனை வழங்கப்படவுள்ளதாக வேளாண் இணை இயக்குனர் கூறியுள்ளார்.வேளாண் இணை இயக்குனர் மனோகரன் கூறியது:தர்மபுரி மாவட்டத்தில் பப்பாளி, கொய்யா மற்றும் மரவள்ளி பயிர்களில் மாவு பூச்சி தாக்குதல் அதிகமாக காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மாவு பூச்சிகளை கட்டுப்படுத்தாவிடில் செடிகளில் இருந்து சாற்றை உறிஞ்சுவதால் வளர்ச்சி பாதிப்பு ஏற்படுத்தும்.மாவு பூச்சிகள் மேல் வெள்ளை நிற மெழுகு பொருள் காணப்படுவதால், முழுமையாக இவற்றை கட்டுப்படுத்துவது கடினம். ஆனாலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மூலம் இவற்றை கட்டுப் டுத்தலாம்.முதல்கட்டமாக விவசாயிகள் வயல் வரப்புகளில் உள்ள பார்த்தினியம் போன்ற களைகள் மற்றும் பிற உதிர்ந்த குப்பைகளை நீக்குவதன் மூலம் மாவு பூச்சிகளின் மாற்று உணவு வசதி தடை செய்ய வேண்டும். தாக்குதல் தென்பட்டவுடன் பரவாமல் இருக்க தாக்கப்பட்ட செடிகளை பிடிங்கி அழிக்க வேண்டும். பருத்தி பயிரில் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், கண்காணிப்பு அவசியம் தேவை.பயறு வகைகளை ஒரப்பயிராக சாகுபடி செய்ய வேண்டும். இதனால், இரை விழுங்கிகள் பிரிட்டோ வேமஸ் பொறி வண்டின் புழுக்கள் அதிகம் உற்பத்தியாகி மாவு பூச்சிகள் தாக்கி உண்ணும். மாவு பூச்சிகளோடு எறும்புகளை சேர்த்து கட்டுப்படுத்த வேண்டும்.இரண்டாம் கட்டமாக தாக்குதல் அதிகம் காணப்பட்டால், ரசாயன மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். செடிகளில் மேல் மற்றும் அடிப்பகுதி தண்டை சுற்றியும் தெளிக்க வேண்டும்.ஒரு ஹெக்டேருக்கு கார்பரில் 50 சதம் 2.5 கிலோ, தைபோடிகளர்ப் 75 சதம் 750 கிராம், பரப்பனோபாஸ் 25 சதவீதம் 1.25 லிட்டர், குயினல்பாஸ் 25 சதம் 2 லிட்டர் குளோர்பைரிபாஸ் 25 சதம் 2.5 லிட்டர் மேலும் வெப்ப எண்ணெய் 2 லிட்டர் அளவில் சேர்க்க வேண்டும். இதனுடன் ஒட்டும் திரவம் அல்லது காதி சோப்பு கலந்து ஐந்து நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். இவ்வாறு மாவு பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தி அதிக மகசூலை பெறலாம். மேலும் விவரங்கள் தேவைப்படின் விவசாயிகள் மாவட்ட வேளாண்மை அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குரூ.7.3 லட்சம் நிவாரணம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,01:47 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுக்கா உள்ளிட்ட பகுதியில் கடந்த அக்டோபரில் மழையால் பாதிக்கப்பட்ட பயிருக்கு, மாநில அரசின் நிவாரண உதவிதொகை வழங்கும் நிகழ்ச்சி கிருஷ்ணராயபுரம் தாலுகா அலுவலகத்தில் நடந்தது.கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ., காமராஜ் தலைமை வகித்தார். கிருஷ்ணராயபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாசில்தார் பாலசுந்தரம் துணை தாசில்தார் ராம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.
மணவாசி, மாயனூர், பாலராஜபுரம், ரங்கநாதபுரம், வீரராக்கியம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் 73,000 ஹெக்டேர் பாதிக்கப்பட்டது. தொகுதி எம்.எல்.ஏ., காமராஜ் நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட 343 விவசாயிகளுக்கு 7 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி தொகை அளிக்கப்பட்டது. இதற்கான நிகழ்ச்சியில் உதவி தொகையை எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார். ஒன்றிய செயலளார் உமாபதி, முன்னாள் மணவாசி பஞ்சாயத்து தலைவர் நந்தகுமார் மற்றும் பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைகேட்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,22:27 IST

விழுப்புரம் : விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நாளை விழுப்புரத்தில் நடக்கிறது. விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நாளை (21ம் தேதி) காலை 10 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்குகிறார். விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் விவசாயம் தொடர்பான குறைகளை தெரிவித்து பயன் பெறலாம் என கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**பருத்தி சந்தையில் ரூ.1.21 கோடி விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,22:22 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பருத்தி வாரச் சந்தையில் இதுவரை ஒரு கோடியே 21 லட்சம் ரூபாய் "பஞ்சு' விற்பனையானது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கத்தின் மூலம் பருத்தி வார சந்தை கடந்த மாதம் 15ம் தேதி துவங்கியது.

வாரந்தோறும் புதன்கிழமைகளில் நடைபெறும் பருத்தி சந்தை விறுவிறுப்பாக நடந்து வருகிறது. நேற்று நடந்த பருத்தி சந்தையில் 2,000 மூட்டைகள் பஞ்சு 36 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. ஒரு குவிண்டால் பஞ்சு அதிகபட்சமாக 5,270 ரூபாய், குறைந்தபட்சமாக 4,670 ரூபாய் என விலை நிர்ணயிக்கப்பட்டது. இந்தாண்டு 9 கோடியே 70 லட்சம் ரூபாய் இலக்கு நிர்ணயித்துள்ள நிலையில், நேற்று வரை ஒரு கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பில் பஞ்சு விற்பனை நடந்தது.

**சூரியகாந்தி பயிர் அமோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,22:16 IST

சிறுபாக்கம் : பருவநிலை மாற்றத்தால் குறைந்த அளவில் பயிரிடப்பட்ட சூரியகாந்தி அமோக விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சிறுபாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள மங்களூர், மலையனூர் உள்ளிட்ட அறுபதுக்கும் மேற்பட்ட மானாவாரி விவசாயிகள் மணிலா, மல்லி பயிர்களுடன் ஊடுபயிரான கடுகு, சூரியகாந்தி, ஓமம் பயிர்களை விளைவிப்பது வழக்கம். இப்பயிர்கள் 70 நாட்களிலேயே விளைச்சல் தருவதால் கடும் பனிப்பொழிவினை நம்பி விளைவித்தனர். கடந்த நவம்பர், டிசம்பர் மாதத்தில் பெய்த கனமழை மற்றும் பனிப்பொழிவு காலத்தில் பருவநிலை மாறி பெய்த மழையின் காரணமாக விவசாயிகள் ஊடு பயிர் விளைவிக்கவில்லை. இருப்பினும் சொற்ப அளவிலான விவசாயிகள் சூரியகாந்தி பயிரினை விளைவித்தனர். தற்போது சூரியகாந்தி நல்ல விளைச்சலுடன் பூத்துக் குலுங்குகிறது. ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். இதனால் சூரியகாந்தி பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**மரங்களை பாதுகாக்கவனத்துறை புதுமுயற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,22:33 IST

கொடைக்கானல்:கொடைக்கானலில் இயற்கை வளம் பாதுகாக்க, சுற்றுலா வரும் பயணிகள் மரங்களை பற்றி அறிந்து கொள்ளும் வகையில், தகவல் பலகை வைத்து விழிப்புணர்வு ஏற்படும் புதுயுக்தியை வனத்துறை மேற்கொண்டுள்ளது.கொடைக்கானலுக்கு சீசன் நேரம் மட்டுமின்றி, வார விடுமுறை நாட்களில் வட மாநில,வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. இப்படிவரும் பயணிகள் இங்குள்ள இயற்கை வளங்களை குறித்த தகவல்கள் தெரியாததால், வனப்பகுதிக்குள் குப்பைகளை போடுவதும், மரக்கிளை களை ஒடிப்பது போன்ற

செயல்களில் ஈடுபடுகின்றனர். இதை தவிர்க்கும் வகையில், தற்போது வனத்துறை சார்பில் மரங்களின் பெயர்கள், பயன்கள், வாழ்நாள் விபரம் குறித்த தகவல்கள் அடங்கிய பெயர்பலகையை மரங்களில் பொருத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். முதற் கட்டமாக ஏரியை சுற்றியுள்ள மரங்களில் வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டு, வடமாநில, ஆராய்ச்சியாளர்கள் உட்பட என அனைத்து தரப்பு சுற்றுலா பயணிகளும் படித்து தகவல் பெற உதவும் என நம்புகின்றனர்.மாவட்ட வன அலுவலர் சம்பத் கூறுகையில்,"இயற்கை வளத்தை பாதுகாக்கும் வகையில், முதற்கட்டமாக ஏரியை சுற்றி மரங்களின் தகவல் குறித்த பெயர்பலகை வைக்கப்பட்டுள்ளது. வரும் சீசனுக்குள் காட்ரோடு முதல் பேரிஜம் வனப்பகுதி வரை உள்ள அனைத்து மரங்களில் இதே போன்று பலகைகள் பொருத்தப்படும்' என்றார்.

**வறண்ட கிணறுகளால் வெங்காய விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,23:55 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே பிள்ளையார்நத்தம், தொட்டியப்பட்டி பகுதி கிணறுகளில், தண்ணீர் இல்லாததால், வெங்காயம் கருகுவதை தவிர்க்க, விலைக்கு வாங்கும் தண்ணீரை பாய்ச்சி காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பிள்ளையார்நத்தம், மீனாட்சிபுரம், தொட்டியப்பட்டி, பூவாணி பகுதி விவசாயிகள் வெங்காயம் பயிரிட்டனர். பருவமழை போதிய அளவு இப்பகுதிகளில் பெய்யாததால், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போனது.

பாதி வளர்ந்த நிலையில் வெங்காய செடிகள், தண்ணீரின்றி கருகும் நிலை ஏற்பட்டது. இதனால் விவசாயிகள், லாரி தண்ணீரை விலைக்கு வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள னர்.விவசாயி அய்யனார் கூறியதாவது: அனைத்து இடங்களிலும் பெய்த மழை இப்பகுதியில் ஏமாற்றி விட்டதால் கண்மாய், கிணறுகளில் தண்ணீர் இல்லை. இதனால் டேங்கர் லாரி தண்ணீரை 650 ரூபாய் கொடுத்து வாங்கி தெளித்து வருகிறோம். மூன்று நாளுக்கு ஒரு முறை பாய்ச்சி வருகிறோம். தண்ணீருக்காக மட்டும் 5 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். தற்போது வெங்காய செடிகளில் நோயும் தாக்கியுள்ளதால் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது, என்றார்.